International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20-3 July - September 2026

Published on 14, Jul - Sep 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# வழிபாட்டு வளர்ச்சியில் ஆற்றுப்படை

**வெ. விஷ்ணு**
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்)

**முனைவர் இரா. சிவகுமார்**
இணைப் பேராசிரியர் & நெறியாளர், முதுகலை & தமிழாய்வுத் துறை
முத்துரங்கம் அரசினர் கலைக் கல்லூரி (தன்னாட்சி),வேலூர்-2
திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்

**ஆய்வுச் சுருக்கம்**

இறை வழிபாட்டிற்கு முன்னோடியாக அரச வழிபாடு இருந்துள்ளதை தொல்காப்பியத்தின் பாடாண் திணைவழி, ஆற்றுப்படை இலக்கியங்களைக் கொண்டு இக்கட்டுரை ஆய்வு செய்கின்றது. இதில் வழிபாட்டின் சொற்பொருள் விளக்கம், போர்த்திணைகளின் வழி அரசனின் படிநிலையாக்க வளர்ச்சிகள், அரச வழிபாட்டு நிலைகள் போன்றவை இடம்பெற்றுள்ளன.

**முதன்மைச் சொற்கள்:** ஆற்றுப்படை, பாடாண்திணை, அரச வழிபாடு, இறை வழிபாடு, சங்க இலக்கியம், போர்த்திணை, வழிபாட்டு வளர்ச்சி.

**முன்னுரை**

வழிபாடு என்பது பொதுநிலையில் ஒருவரை சார்ந்து பணிந்து நிற்றலாகவும், சிறப்பு நிலையில் இறைநெறியின் ஒரு கூறாகவும் பொருளுணர்த்தப்படுகிறது, **“அவன் எம் இறைவன் யாம் அவன் பாணர்”** (புறநா.316), என்றவாறு இறை என்ற சொல் முதலில் அரசனைக் குறித்தது. மக்களுக்கான நன்மை தீமைகளுக்குப் பொறுப்பேற்று அவர்களுக்கு முறைசெய்து வழிநடத்துபவனாக அரசனும் அரசனின் ஆணைவழி நடப்பவர்களாக குடிகளும் என உருவான சமூக ஒப்பந்தத்தில் அரசனை மக்களிடத்தில் அறிமுகப்படுத்துவதிலும் மக்கள் அவன் தலைமையை ஏற்றுக்கொள்ளச் செய்வதிலும் அரசன் பற்றிய ஆளுமைக் கருத்தாக்கத்தைப் பரப்ப வேண்டிய தேவையில் அரசனைப் புகழ்தல் இன்றியமையாததா யிற்று. இதனை அழியாத எழுத்துகளாகப் பதிவு செய்யவும் பரப்பவும் கலைஞர்களும் புலவர்களும் பரிசிலர்களும் அப்புகழ்ச் செய்திகளை மக்களிடம் பாடல்களாகவும் உரைகளா கவும் கொண்டு சேர்த்தனர். இப்புகழ்ச்சி இயல்பான வீரம், போர் வெற்றி, ஆட்சித்திறம், கொடை, அருள் போன்றவற்றைப் பாடும் நிலையிலிருந்து படிப்படியே அவற்றை மீயாற்றல் களாக உயர்த்திப் பாடும் புனைவு நிலையாக மாற்றமுற்றது. இயல்புக்கு மாறான மீயாற்றல் தகுதிகளாகக் கற்பிக்கப்பெற்றபோது, அது கடவுள்நிலையை இணைப் பிரதியாக்கியது. போர்களால் அரசனோ அல்லது அரசபதவியோ நிலையில்லாமல் மாறியும் வீழ்ந்தும் அரசனின் நிலையாமையைப் பறைசாற்றும்போது, அத்தகைய அழிவுகளுக்கு

ஆட்படாத கற்பித ஆற்றல் தலைமையாக இறைப்பிரதி உருவாயிற்று, இறைப்பிரதிக்கு இணையாக, வாழும் அரசனை உயர்த்திப் புகழ்தல் அரச வழிபாடாக மேலும் வளர்ச்சிபெற்றது. பின்னர், இறை என்ற கருத்தியல். அரசனுக்கு மேலானதாக, மெய்த்தன்மை உடையதாக மக்கள் நம்பும் வகையில் கற்பிக்கப்பட்டது. இவ்வாறு இறை வழிபாட்டு வளர்ச்சிக்கு முன்னோடியாக, அரச வழிபாடு விளங்கியதைப் பதிவு செய்வதாகவே பாடாண்திணை உருவாக்கப் பட்டது. இவ்வழிபாட்டுக் கோட்பாடு, தனிமனிதப் போற்றுதலிலிருந்தே தெய்வ வழிபாடாகப் படிநிலையில் வளர்ச்சியுற்ற பாங்கை, பாடாண்திணையின் துறையாகிய ஆற்றுப்படை வாயிலாக, இக்கட்டுரை ஆராய்கிறது.

### ஆய்வுச் சிக்கல்

சங்க இலக்கியங்களில் இடம்பெறும் ஆற்றுப் படை இலக்கியங்கள் பொதுவாக வள்ளல் களின் கொடைச் சிறப்பையும், புலவர்களை ஆற்றுப்படுத்தும் இலக்கியங்களாகவும் மட்டுமே கருதப்பட்டு வருகின்றன. ஆனால், அவற்றில் அரசனின் ஆளுமையை மக்களிடையே நிலைநிறுத்தி, அரசனை வழிபாட்டிற்குரியவராக உருவாக்கும் கருத்தியல் கூறுகளும் அடங்கியுள்ளன. மேலும், அரச வழிபாடு எவ்வாறு படிப்படியாக இறை வழிபாட்டின் வளர்ச்சிக்கான அடித்தளமாக அமைந்தது என்பது குறித்த ஆய்வுகள் மிகக் குறைவாக உள்ளன. எனவே, ஆற்றுப்படை இலக்கியங்களில் காணப்படும் அரசவழிபாட்டுக் கூறுகளையும், அவை இறைவழிபாட்டின் வளர்ச்சியுடன் கொண்டுள்ள தொடர்பையும் ஆராய்வதே இவ்வாய்வின் முதன்மைச் சிக்கலாக அமைகிறது.

### ஆய்வின் நோக்கங்கள்

இவ்வாய்வு பின்வரும் நோக்கங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது:

* 'வழிபாடு' என்ற சொல்லின் பொருள் வளர்ச்சியை சங்க இலக்கியச் சான்றுகளின் அடிப்படையில் விளக்குதல்.
* போர்த்திணைகளின் வழியாக அரசனின் படிநிலை வளர்ச்சியை ஆராய்தல்.
* பாடாண்திணை மற்றும் ஆற்றுப்படை இலக்கியங்களில் அரச வழிபாட்டின் கூறுகளை அடையாளம் காணுதல்.
* ஆற்றுப்படை இலக்கியங்களில் அரசனை இறைத்தன்மைக்கு உயர்த்திக் காட்டும் இலக்கிய உத்திகளை விளக்குதல்.
* அரச வழிபாடு இறை வழிபாட்டின் வளர்ச்சிக்கான முன்னோடி என்ற கருத்தை இலக்கியச் சான்றுகளின் அடிப்படையில் நிறுவுதல்.

### ஆய்வுமுறை

இவ்வாய்வு விளக்கவியல் (Descriptive Method) மற்றும் பகுப்பாய்வு (Analytical Method) ஆகிய ஆய்வுமுறைகளின் அடிப்படையில் மேற் கொள்ளப்பட்டுள்ளது. ஆய்விற்குத் தேவை யான முதன்மைத் தரவுகளாக தொல் காப்பியம், புறநானூறு, குறுந்தொகை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப் படை, பொருநராற்றுப்படை, மலைபடுகடாம் உள்ளிட்ட சங்க இலக்கிய நூல்கள் பயன் படுத்தப்பட்டுள்ளன. இந்நூல்களில் இடம் பெறும் வழிபாடு, அரச வழிபாடு, பாடாண் திணை மற்றும் ஆற்றுப்படை தொடர்பான பாடல்கள் உரைநிலையிலும் கருத்தியல் நிலையிலும் பகுப்பாய்வு செய்யப் பட்டுள்ளன. மேலும், தொடர்புடைய ஆய்வு நூல்கள், உரைநூல்கள் மற்றும் துணை ஆய்வுகள் ஒப்பீட்டு அணுகுமுறையில் பயன் படுத்தப்பட்டு, அரச வழிபாட்டிலிருந்து இறை வழிபாடு நோக்கிய வளர்ச்சி ஆய்வுக்குட் படுத்தப்பட்டுள்ளது.

### வளர்ச்சி நோக்கில் வழிபாடு

வழிபாடு என்ற சொல்லாட்சி, சமய காலத்திற்கு முன்பாக, வழியைத்தேடிச் செல்லுதல், வழியைப் பின்பற்றுதல் என்ற பொருளிலே கையாளப்பட்டுள்ளது. வழிபாடு என்னும் சொல்லிற்கான பொருள்களாக, தமிழ் லெக்சிகன் அகராதி, "வழியிற் செல்லுகை, வழியைப் பின்பற்றுகை, வணக்கம், பூசனை, வழக்கம், சமயக் கோட் பாடு" என்ற பொருள்களைத் தருகின்றது.

இதன்வழி, இனக்குழுச் சமூகத்தில் தலைமையின் வழியில் செல்லுதல் என்ற நிலை, பின்பு அவனுடைய வழியைப் பின் பற்றுதல் என்று மாறியது. அரசு உருவாக் கத்தின்போது, அந்தத் தலைமையைச் சார்ந்து வாழுகின்ற நிலையில், தலைமையை வணங்குதல் என்ற நிலைக்கு மாறியது, சான்றாக, குறுந்தொகையில், **வழிபடல் சூழ்ந்திசின் அவருடை நாட்டே**(குறுந்.-11) என்ற அடியில் வழிபடுதல் என்பது வழியை தேடிச் செல்லுதல் என்ற பொருளில் கையாளப்பட்டுள்ளது. அதற்கு அடுத்த கட்ட நிலையான சார்ந்து வணங்குதல் என்ற பொருளை, **வழிபடுவோரை வல்லறிதீயே பிறர் பழி கூறுவோர் மொழி தேறலையே** (புறநா.10) என்ற புறநானூற்றுப் பாடலடிகள் எடுத்துரைக்கின்றன.

### போர்த்திணைகளும் அரசனின் படிநிலையாக்கங்களும்

அன்பின் காதலை முன்னிறுத்தி இல்லறம் நோக்கிய குடும்ப வளர்ச்சியினைக் கட்டமைக்கும் ஏழு அகத்திணைகளுக்கு இணையாக, நானிலத்தில் நடைபெற்ற போர் சார்ந்த சமூக வளர்ச்சி நிகழ்வுகளை உணர்த்துவனவாக முறையே வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் ஆகிய ஏழு புறத்திணைகளும் கட்டமைக்கப் பட்டுள்ளன. இனக்குழு வாழ்விலிருந்து மேய்ச்சல் நாகரிகம் வளர்ந்தபோது உடைமை யும், உடைமைவழி உற்பத்தி வாழ்வியல் வளர்ச்சியில் அரசும் தோற்றம் கொண்டன. குறிப்பாக, ஆநிரைகள் உடைமைகளாக உணரப்பெற்ற நிலையில், அவ்வுடைமையைக் கைப்பற்றும் முயற்சியிலேயே போர்முறை தோற்றம் கொண்டது அதன் தொடர்ச்சியி லேயே அரசு உருவானது. போர்முறைகளால் வளர்ச்சி பெற்ற அரசின் படிநிலையாக்கங் களாக நான்கு நிலைகள் கட்டமைக்கப் பட்டன. அவை,

* இணைநிலை
* உயர்நிலை
* மீயுயர்நிலை
* தன்னேரில்லா நிலை

இணைநிலை என்பது, இனக்குழு வாழ்வில் தம்முள் ஒருவனைத் தலைவனாக ஏற்று, அவனுடைய வழிநடத்தலில் ஆநிரை கவர்தல், மற்றும் மீட்டலாகிய வெட்சி, கரந்தைப் போர்களில் வென்றதன் பின்னர், மீண்டும் அவனைத் தங்களுக்குள் ஒருவனாக சமநிலை யில் வைத்துக் கருதப்படுவதாகும்.

உயர்நிலை என்பது, இனக்குழு வாழ்விலி ருந்து உடைமை நோக்கிய உற்பத்தி வாழ்வுக்கு நகரும்போது, வஞ்சிப்போரின் வழி, உருவாகிய நிலையான தலைமையைக் குறிப்பது. இதன்மூலம், சமத்துவம் காக்கும் தன்னியல்பிலான இனக்குழுச் சமூகம், ஆளுமையை சார்ந்து வணங்கி வாழும் ஏற்றத்தாழ்வு நிலைக்கு மாறியது.

மீயுயர்நிலை என்பது, தன்னுடைய நாட்டைப் பேரரசாக விரிவுபடுத்தும் நோக்கில், உழிஞைப் போரின் வழியே, தன்னை போன்று ஆற்றல் உள்ள பிற அரசர்களு டைய கோட்டைகளை அழித்து வென்றதன் வழி உருவானது. இதன்மூலம் பேரரசர்க ளையும் குறுநில மன்னர்களையும் ஒருசேர தன்கீழ் அடிப்படுத்தி, முழுமையான வேந்தனாக மீவுயர்வு நிலையில் வைத்துப் போற்றப்படுவதாகும்.

தன்னேரில்லா நிலை என்பது பரந்துபட்ட நிலத்தின் மேல் ஆட்சி செலுத்தி வரும் வேந்தன் தும்பைப் போரின் வழியே, தன்னைப் போன்றே தம் ஆற்றலை மிகுத்து உரைக்கும் பிற வேந்தரோடு போர் செய்து இணையிலா வெற்றி பெறுதல். இவ்வாறு புவியில் தனக்கு இணை யாருமில்லை என்ற புகழோடு பெருவேந்தனாக மாறுகின்ற நிலையில், அரசனுடைய நான்காவது வளர்ச்சிப்படிநிலையான தன்னேரில்லா நிலை அமைகின்றது.

### பாடாண் திணை கட்டமைக்கும் அரச வழிபாடு

போர்த்திணைகள் வழி, கட்டமைக்கப்பட்ட அரசனை வாழ்த்தியும், வேண்டியும், அடி பணிந்தும் வழிபடுவதைப் பாடாண்திணை கட்டமைக்கின்றது. அரசன் குடிமக்களுக்கு உயிரினும் மேலானவனாக விளங்குபவன்

என்பதனை மோசிகீரனார், "நெல்லும் உயிரன்றே, நீரும் உயிரன்றே, மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" (புறநா.186) என்று குறிப்பிடுகின்றார். அவ்வாறு புலவர் களும் பாணர் முதலியோரும் அரசனை வாழ்த்தும்போது அவனுடைய வீரம், தோற்றச்சிறப்பு, ஆற்றல் போன்றவை அவனுடைய பேராளுமை தோன்றப் புகழப் படுகின்றன. இதனையே பாடாண் திணை ஆண்மகனின் பாடுதற்குரிய ஒழுகலாறுக ளாகக் குறிப்பிடுகின்றது. அவ்வாறு புகழும் போது அரசனுடைய பண்புகள் யாவும் இணைப்பிரதியான கற்பிதக் கடவுளரோடு இணைத்துக் கூறப்படுகின்றன. இதனைத் தொல்காப்பியர், பூவைநிலை தொடங்கி, கொடிநிலை, கந்தழி, வள்ளி, கடவுள் மாட்டு மானிடப்பெண்டிர் நயந்தபக்கம். கண்பெடை நிலை, துயிலெடைநிலை என்றவாறு பல்வேறு துறைகளில் எடுத்துமொழிந்துள்ளார். இவற்றோடு, அரசனுடைய கொடி, வாள், செங்கோல், குடை, விளக்கு ஆகியவற்றின் சிறப்புகளைப் போற்றுதல் போன்றவை பின்னாளில் தெய்வ வழிபாட்டுக்கூறுகளாக வளர்ச்சிபெற்றன என்பது குறிப்பிடத் தக்கது.

**ஆற்றுப்படையும் அரச வழிபாடும்**

கூத்தர், பாணர், பொருநர், விறலியர் போன்ற கலைஞர்கள், தம் வறுமைதீர வழங்கும் அரசனைத் தேடி செல்லும் திசையறியாது வழியில் காத்திருக்கின்றனர். அவர்களை எதிர்ப்படுகின்றவர்களாக, அரசனிடம் பாடி பரிசில் பெற்ற கலைஞர்கள், இந்த அரசனிடம் சென்று அவனைப் பாடினால் உங்களுடைய வருத்தம் தீரஉணவு, உடை, போன்றவற்றை அளித்து உங்களுடைய வறுமை தீரும் வகையில் கொடைகளை அளிப்பான் என ஒரு அரசனிடத்தே வழிப்படுத்துவதாக ஆற்றுப் படை (தொல்.பொருள்.–88) அமைகின்றது. மேலும் அரசனைப் போற்றல், அடிபணிதல், வேண்டி நிற்றல், என்று வழிபாட்டுநிலை களை ஒருங்கிணைத்து, 1) அவையோர் வழிபடுதல் 2) பரிசிலர் வழிபடுதல் 3) பிற வேந்தர்கள் வழிபடுதல் 4) நாட்டு மக்கள் வழிபடுதல் என்ற வரிசையில், அரசனை வழிபாட்டுக்குரியவனாகக் கட்டமைக்கிறது.

**அவையோர் வழிபடுதல்**

சிறுபாணாற்றுப்படை, அவையில் உள்ள கற்றறிந்த சான்றோர்,

**செய்ந்நன்றிஅறிதலும், சிற்றினம்
இன்மையும்,
இன் முகம் உடைமையும், இனியன்ஆதலும்,
செறிந்துவிளங்கு சிறப்பின் அறிந்தோர் ஏத்த**
(சிறு.207-209)

என்று, அரசனின் பண்புகளை எடுத்துரைத்து வாழ்த்துகின்றனர்; போர் வீரர்கள்,

**அஞ்சினர்க்கு அளித்தலும், வெஞ்சினம்
இன்மையும்,
ஆண்அணி புகுதலும், அழிபடைத்
தாங்கலும்,
வாள்மீக் கூற்றத்து வயவர் ஏத்த** (சிறு.210-212)

என்று போராற்றலை வியந்து வாழ்த்துகின்ற னர்; அரிவையர்,

**கருதியது முடித்தலும், காமுறப் படுதலும்,
ஒருவழிப் படாமையும், ஓடியது உணர்தலும்,
அரிஏர் உண்கண் அரிவையர் ஏத்த**
(சிறு.213-215)

என்று, காமச்சிறப்பினை வாழ்த்துகின்றனர் என, எடுத்துரைக்கின்றது. இவ்வாறு அரசனு டைய புகழ் மேம்பாட்டினை அவையில் உள்ளோர் வாழ்த்தி வழிபட்டதனை சிறுபாணாற்றுப்படை எடுத்துரைக்கிறது.

**பரிசிலர் வழிபடுதல்**

அரசனிடத்தே வேண்டி நிற்றல் என்ற முறையில் அவனுடைய பல்வேறு பட்ட பண்புகளை வாழ்த்தி, அவனிடமிருந்து தங்க ளுடைய வறுமை தீரும் வகையில் கொடை களை வேண்டி பரிசிலர் வழிபடுகின் றனர். கடையெழுவள்ளல்கள் வழங்கும் கொடை மரபை அவர்களுக்குப்பின் நல்லியக் கோடன் ஒருவனே தாங்குவதாகப் பரிசிலர் பாடுவதை சிறுபாணாற்றுப்படை குறிப்பிடுகின்றது.

**எழுவர் பூண்ட ஈகைச்செந் நுகம்,
விரிகடல் வேலி வியலகம் விளங்க,
ஒருதான் தாங்கிய உரனுடை நோன்தாள்**
(சிறு.113-115).

குறிப்பாக, பரிசிலர்கள் ஒருபுறம்,

**அறிவு மடம் படுதலும், அறிவு நன்கு உடைமையும்,**

**வரிசை அறிதலும், வரையாது கொடுத்தலும்,**

**பரிசில் வாழ்க்கைப் பரிசிலர் ஏத்த** (சிறு.216-218)

என்று கொடைத்திறத்தைப் புகழ்ந்து பாடுகின்றனர் மறுபுறம் சீறியாழ் மீட்டும் சிறுபாணர்கள்,

முதுவோர்க்கு முகிழ்த்த கையினை' எனவும்,

**'இளையோர்க்கு மலர்ந்த மார்பினை' எனவும்**

**'ஏரோர்க்கு நிழன்ற கோலினை' எனவும்**

**'தேரோர்க்கு அழன்ற வேலினை'** எனவும் (சிறு.231-234) என்று கொடைத்திறம் மட்டுமின்றி, அரவணைக்கும் பண்பு, உழைப்போர்க்குக் குடை தாங்கும் மாண்பு, பகை வெல்லும் ஆண்மை ஆகியவற்றையும் இணைத்துப் பாடுகின்றனர்.

### பிற வேந்தர்கள் வழிபடுதல்

அரசனிடம் தோல்வி அடைந்த பகையரசர்களும், நட்பு வேண்டும் மன்னரும், அவன் ஆற்றலுக்கு அஞ்சி, அடைக்கலம் பெறவந்த பிற மன்னர்களும், அடிபணிந்து திறை செலுத்த வாயிலில் காத்திருந்ததனைப் பெரும்பாணாற்றுப்படை,

**நட்புக்கொளல் வேண்டி, நயந்திசினோரும்,**

**துப்புக்கொளல் வேண்டிய துணையிலோரும்...**

**பல் வேறு வகையின் பணிந்த மன்னர்.....**

**செவ்வி பார்க்கும் செழுநகர் முற்றத்து,** (பெரும்.421-428)

என்று எடுத்துரைக்கிறது..

### நாட்டு மக்கள் வழிபடுதல்

சிற்றூர்களில் தன்னியல்பில் வாழும் நாட்டு மக்களிடம் அரசனை அறிமுகப்படுத்தி, அவர்கள் இந்த அரசனின் ஆட்சிக்கு உரியவர்கள் என்று உணர்த்துவது. அதன்மூலம்,உங்கள் அரசனுடைய கூத்தர் என்று சொன்னாலே, மக்கள் தம்முடைய விருந்தினர் போல இல்லங்களில் தங்க வைத்து விருந்தோம்பல் செய்வார்கள் என்றவாறு அரசனுக்கும் மக்களுக்குமான உறவை, உயர்வாகப் போற்றி வணங்கும் நேசமிகு உறவாகக் கட்டமைக்கிறது ஆற்றுப்படை. இதனை,

**மான விறல் வேள் வயிரியம் எனினே**

**நும் இல் போல நில்லாது புக்கு**

**கிழவிர் போல கேளாது கெழீஇ**

**சேண் புலம்பு அகல இனிய கூறி**

**பரூஉ குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு**

**குரூஉ கண் இறடி பொம்மல் பெறுகுவிர்** (மலை.163-169),

என்ற அடிகளின்வழி காணலாம். மேலும், மலையில் கிடைத்த புதுவருவாயாகிய பொருள்களை அரசகாணிக்கையாக அளிப்பதில் மகிழ்ச்சி கொண்டு, குறவர்கள் பறை இசைத்து குரவையாடி மகிழ்வதையும் (மலை. 315-322) கூத்தராற்றுப்படை கூறுகின்றது.

### அரச வழிபாட்டில் கடவுளை முன்னிறுத்தல்

அரசனை இன்னார் மரபில் இருந்து வந்தவன் என்று வாழ்த்துவது சங்க இலக்கியங்களில் பரவலாகக் காணப்படுகின்றது. இதற்கு அடுத்தகட்ட வளர்ச்சி நிலையாகவே அரசன் இறைவனுக்கு இணையாக போற்றப் படுகிறான். அவ்வாறு போற்றப்படும்போது அவனுடைய மரபு, ஆற்றல், போர் செய்யும் திறம் போன்றவையும் கடவுளருக்கு இணையாகப் போற்றப்பட்டுள்ள செய்திகள் ஆற்றுப்படை இலக்கியங்களில் காணப்படுகின்றன. தொண்டைமான் இளந்திரையனைத் திருமாலின் மரபிலிருந்து வந்தவனாகப் போற்றுவதைப் பெரும்பாணாற்றுப்படை,

..........**நீயிரும்,**

**இருநிலம் கடந்த திருமறு மார்பின்**

**முந்நீர் வண்ணன் பிறங்கடை, அந்நீர்த்**

**திரைதரு மரபின், உரவோன் உம்பல்,** (பெரும்.29-31)

என்று குறிப்பிடுகின்றது. மேலும் கரிகால் பெருவளத்தானுடைய ஆற்றலை முருகனோடு ஒப்பிட்டு வாழ்த்தப்படுவதாகப் பொருநராற்றுப் படை கூறுகின்றது.

….வென் வேல்

**உருவப் பல் தேர் இளையோன் சிறுவன்,**

**முருகற்சீற்றத்து உரு கெழுகுருசில்,**

**தாய் வயிற்றிருந்து தாயம் எய்தி,**

(பொரு.129-131)

அரசனைக் காண்பதற்குச் செல்லும் வழித்தடத்தில், எயினர்குடிலில் அரசனுடைய பாணர் என்று சொல்லும்போது எயினர்கள் தெய்வத்திற்கு தேக்கிலையில் படையல் வைப்பது போல பாணர்களுக்கு உணவளிப் பதனை,

**செவ் வரை நாடன், சென்னியம் எனினே**

**தெய்வ மடையின் தேக்கிலைக் குவைஇ, நும்**

**பைதீர் கடும்பொடு பதம்மிகப் பெறுகுவிர்**

(பெரும்.102-104)

என்று பெரும்பாணாற்றுப்படை வழி, அரசனைத் தெய்வநிலையில் வைத்து இனக்குழு மாந்தர் வழிபடுவதை உணர முடிகிறது.

**தொகுப்புரை**

- இனக்குழுவிலிருந்து அரசு நோக்கிய சமுதாய வளர்ச்சி, போர்களினால் தீர்மானிக்கப்பட்டது. இனக்குழுக்கால இணைநிலைத் தலைமை, பேராண்மை மிக்க இறையாற்றலை நோக்கி வளர்ச்சி பெற்றது. அவ்வகையில் சமயங்கள் கற்பிக்கும் இறை வழிபாட்டுக்கு முன்னோடியாக பாடாண்திணையின் அரச வழிபாடு இருந்துள்ளது. .
- அரசனுடைய மேம்பட்ட பண்புகளை நாடு மக்களிடம் சென்று எடுத்துக்கூறி, நாட்டு மக்களை அரசனுக்கு அடிபணிந்தவர்க ளாக வழிபடுத்தியும், அரசவையில் போற்றல், வேண்டிநிற்றல். அடிபணிதல் என்ற நிலைகளில் அவையோர், பரிசிலர், பிறமன்னர் ஆகியோர்தம் வழிபாடுகளை முன்வைத்தும் அரசனை இறைக்கு இணை யாகவும் இறைமரபில் வந்த வழிபாட்டிற் குரியவனாகவும் ஆற்றுப்படை கட்டமைக் கின்றது.
- அந்த வகையில், வழிபாடு என்று சொல் தொடக்கத்தில் வழியைத் தேடிக் கண்டடைதல், தலைமை காட்டிய வழியில் செல்லுதல், பின் தலைமையினைச் சார்ந்து பின்பற்றுதல் என்றவாறு வளர்ச்சிபெற்று, இறைத்தன்மையை நோக்கி நகர்ந்தது. வழிபாடு என்பது இறையை வழிபடுவதாகக் காணப்பட்டாலும், அதற்கு அடிப்படையாக இருந்தது அரச வழிபாடு என்பதைப் பாடாண்திணையின் ஆற்றுப்படை இலக்கியங்களின் வாயிலாக இக்கட்டுரை யானது நிறுவுகின்றது.

**துணை நின்ற நூல்கள்**

1. சங்க இலக்கியம், பத்துப் பாட்டு, (தொகுதி-1,2), அ.மா.பரிமணம் (பதிப்பா சிரியர்), நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்( பி) லிட்., சென்னை 600050. ஐந்தாம் பதிப்பு, அக்டோபர் -2014.
2. “பத்துப்பாட்டு ஆராய்ச்சி”– டாக்டர் மா.இராசமாணிக்கனார்–சாகித்ய அகாதெமி. இரண்டாம் பதிப்பு–2012.
3. தொல்காப்பியம்: புறத்திணையில் உரை வளம், க.வெள்ளைவாரணன், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், முதல் பதிப்பு–1983.
4. “தொல்காப்பியம் மூலமும் உரையும்”, கு.வெ.பாலசுப்ரமணியன் (உரையாசிரியர், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை 600050. முதல் பதிப்பு- 2019
5. தமிழினக் காவலர் தொல்காப்பியர், முனைவர் வேல. நெடுஞ்செழியன், மணிமொழி பதிப்பகம், திருவண்ணாமலை 606601. முதல் பதிப்பு–2022.